**சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி**

**OS.123/2023**

நாள்.04.06.2025

**வா.சா.1. 1–ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:–**

தாவா சொத்தை எந்த ஆண்டில் கிரயம் பெற்றேன் என்றால் 2010–ல். தாவா சொத்தை நான் கிரயம் வாங்குவற்கு முன்பு 1–ம் பிரதிவாதிதான் உரிமையாளர் என்று சொன்னால் சரிதான். நான் தாவா சொத்தை 1–ம் பிரதிவாதியிடம் நேரடியாக கிரயம் பெறாமல் அவரின் பொது அதிகார முகவர் மூலமாக கிரயம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். நான் கிரயம் பெற்ற தாவா சொத்தின் பொது அதிகார முகவர் யார் என்றால் என்னுடைய மனைவி. நான் கிரயம் பெற்ற சொத்தினை பட்டா மாற்றம் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். பொது அதிகார முகவர் எனது மனைவி தான் என இந்த வழக்கில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் சொல்வது போல் பொது அதிகார முகவர் எனது மனைவி என்று சொல்லவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு எனது பெயரில் உள்ள பட்டாவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால்

தாவா சொத்தின் புல எண். 214 என்பதற்கு பதிலாக 241 என கிரயப்பத்திரத்தில் பிழை ஏற்பட்டுள்ளதால் என் பெயரில் பட்டா மாறவில்லை. நான் என் பெயரில் பட்டா மாறிவிட்டதாக ஞாபக மறதியாக சொல்லிவிட்டேன். நான் தாவா சொத்திற்கு என் பெயரில் பட்டா மாற்றம் செய்ய எப்பொழுது மனு கொடுத்தேன் என்றால் 2018, 2019. பட்டா மாற்றம் செய்ய மனு கொடுத்ததற்கான கை நகல் வைத்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்தை கிரயம் பெறுவதற்கு பொது அதிகார முகவரிடம் எவ்வளவு கிரயத்தொகை கொடுத்தேன் என்றால் பொது அதிகார முகவர் எனது மனைவி என்பதால் கிரயத்தொகை எதுவும் கொடுக்கவில்லை. பொது அதிகார முகவர் அதிகாரம் பெற்ற சொத்தை கிரயம் செய்து கொடுக்கும்போது அந்த கிரயத்தொகை முழுவதும் உரிமையாளரிடம் கொடுக்க வேண்டும் என்றால் சரிதான். நான் திருத்துறைப்பூண்டி பகுதியில் ரியல் எஸ்டேட் தொழில் செய்துள்ளேன் என்றால் சரிதான். திருத்துறைப்பூண்டியில் எனது பெயரில் நிறைய சொத்துக்கள் வாங்கியுள்ளேன். ஒரு சொத்தை கிரயம் பெறும்போது சொத்தின் சர்வே எண், பரப்பளவு, நான்கெல்லை, வில்லங்கம் ஆகியவைகளை பார்த்துதான் கிரயம் பெற வேண்டும் என்றால் சரிதான். சார்பதிவாளர் சொத்தினுடைய வருவாய்துறை ஆவணங்களை சரிபார்த்து தான் பதிவு செய்வார் என்றால் சரிதான். சொத்தை கிரயம் பெற்றவுடன் சொத்தின் சுவாதீனத்தை எடுத்துக்கொண்டு வருவாய்துறை ஆவணங்களில் என் பெயரில் மாற்றிக்கொள்வது என்னுடைய கடமை என்றால் சரிதான். நான் தாவா சொத்தை 2020–ல் வேறு ஒருவருக்கு கிரயம் செய்து கொடுக்க முயற்சி செய்யும் வரை நான் கிரயம் பெற்ற

சொத்தின் வருவாய் துறை ஆவணங்களை எனது பெயரில் மாற்றவில்லை என்றால் சரிதான். நான் 2018–ல் தான் நான் கிரயம் பெற்ற சொத்தை விற்பனை செய்ய முயற்சித்தேன்.

**1–ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

Typed down to my dictation, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.